**நாகப்பட்டினம் மாவட்ட நீதிபதி அவர்களின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திரு ஆர். பத்மநாபன், பிஎஸ்ஸி.,பி.எல்.,**
**மாவட்ட நீதிபதி, நாகப்பட்டினம்.**

2018 ஆம் வருடம் ஜுன் மாதம் 04 ஆம் தேதியிட்டது.

-----

பொருள் : நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்ற வேலைவாய்ப்பு அறிவிப்பு, நாள் 19.02.2018 - அலுவலக உதவியாளா் பணி - தகுதிவாய்ந்த விண்ணப்பதாரா்கள் பட்டியல் வெளியீடு மற்றும் வாய்மொழி நோ்முகத் தோ்வு நாள் நிா்ணயிக்கப்பட்டது - அறிவித்தல் - சம்பந்தமாக.

பாா்வை : 19.02.2018 ஆம் நாளிட்ட நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தின் வேலைவாய்ப்பு அறிவிப்பு.

------

**<u>உத்தரவு ஆர்.ஓ.சி.எண் 1412/2018/அ1/ நாள் 04.06.2018.</u>**

பார்வையில் கண்ட நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்ற வேலைவாய்ப்பு அறிவிக்கையினைத் தொடர்ந்து அலுவலக உதவியாளர் பணிக்கு மட்டும் வரப்பெற்ற விண்ணப்பங்களில், கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படியான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏறறுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்சொன்ன விண்ணப்பதாரர்கள் அலுவலக உதவியாளர் பணிக்கான வாய்மொழி நேர்காணலுக்கு ஆஜராகுமாறு இதன்மூலம் அழைக்கப்படுகிறார்கள். இதர பணிகளுக்கான நேர்காணல் தேதி பற்றி விரைவில் இதே இணையதளத்தில் அறிவிப்பு வெளியிடப்படும்.

அதிக அளவிலான விண்ணப்பதாரர்களை நேர்காணல் நடத்த வேண்டி உள்ளதால் விண்ணப்பதாரர்கள் தொகுதி வாரியாக பிரிக்கப்பட்டு தினசரி காலை மற்றும் மாலை என இரண்டு அமர்வாக நேர்காணல் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் தங்களது தொகுதி எண் (Batch Number), நேர்காணல் தேதி மற்றும் நேரம் குறித்து கீழே

குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை சரிபார்த்து அதனுடைய நகல் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். நேர்காணல் பற்றி விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் தகவல் எதுவும் அனுப்பப்படமாட்டாது.

மேற்சொன்ன நேர்காணலானது நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் நேர்காணல் ஆரம்பிக்கும் நேரத்திற்கு 30 நிமிடங்களுககு முன்னதாக வருகை புரிந்திருக்க அறிவுறுத்தப்படுகிறது. விண்ணப்பதாரர்களின் நேர்காணலானது பிற்பகல் அமர்வில் நடைபெறவிருக்கும் பட்சத்தில், அவர்கள் காலை வேளையில் வந்து காத்திருக்கத் தேவையில்லை.

அனைத்து விண்ணப்பதாரர்களும் நேர்காணலின் போது தங்களது கல்வித் தகுதி, வயது, சாதி மற்றும் சம்பந்தப்பட்ட இதர அசல் சான்றிதழ்களை கண்டிப்பாக ஆஜர்படுத்த வேண்டும். அதனுடன் விண்ணப்பதாரர்கள் சுய சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் புகைப்பட நகல்களுடன் வரவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. சரிபார்ப்புக்கு பின் அசல் சான்றிதழ்கள் விண்ணபதாரர்களிடம் திருப்பி அளிக்கப்படும்.

நேர்காணலுக்கு ஆஜராவதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்பட மாட்டாது.

ஒம்/- ஆர். பத்மநாபன்,
**மாவட்ட நீதிபதி,**
**நாகப்பட்டினம்.**

**குறிப்பு:** 1) நேர்காணல் தேதி மாற்றம் குறிதது எவ்வித வேண்டுகோளும் ஏற்கப்படமாட்டாது. விண்ணபதாரர்கள் குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் நேர்காணலுக்கு ஆஜராகவில்லையெனில், அவர்களுக்கு நேர்காணலுக்கு ஆஜராவதில் விருப்பமில்லை என்று கருதப்படும்.

2) வேலைவாய்ப்பு தொடர்பாக விண்ணப்பதாரர்கள் எந்த ஒரு நபரையோ / வதந்திகளையோ நம்பி ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.